BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

E - ISSN: 3139 -1893

An international open access, peer- reviewed, refereed journal

# பெரியபுராணத்தின் சமுதாய நிலை
# Periyapuranathin samudhaya Nilai

வெ. ஜெயலட்சுமி

பெரியார் பல்கலைக்கழக பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சேலம்- 16, தமிழ்நாடு, இந்தியா.

முனைவர் சா. பூங்கொடி

உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி(த), சேலம், தமிழ்நாடு.

**V. Jayalakshmi**

Periyar University Parttime Ph.D. Research Scholar, PG and Research Department of Tamil,
Sri Sarada College for Women (A), Salem 16, Tamil Nadu, India. Email: jayalakshmikandasamy09@gamail.com

**Dr. S.Poongodi**

Assistant Professor, PG and Research Department of Tamil, Sri Sarada College for Women (A), Salem- 16,
Tamil Nadu, India. Email: poonganathan@gmail.com.

**Abstract**

The Periyapuranam, a Saiva religious epic authored by Sekkizhar, stands as a historical document that vividly captures the social life of the Chola period in the 12th century CE. Beyond narrating the devotional histories of the Nayanmars, it elaborately portrays various aspects of contemporary society such as culture, education, caste structure, economic conditions, trade, prevailing beliefs among the people, and marriage rituals. Although agriculture was the primary occupation of the people of that period, they were also engaged in diverse professions such as weaving, hunting, pottery making, and laundry work. The existence of temple architecture, educational institutions, and sculptural arts is evidenced through references found in the Periyapuranam. The aim of this article is to examine these aspects based on the literary evidence available in the text. Humaneness, hospitality, and extending help to the poor and the marginalized were considered noble virtues by the people. Kings undertook public welfare activities such as digging tanks and constructing roads, thereby enabling the people to lead a peaceful life. Hence, the objective of this article is to analyze certain facets of such social conditions with the Periyapuranam as the primary source.

**Key Words:** Document, Earthen Pot, Hospitality, Culture, Nayanmars.

**ஆய்வுச்சுருக்கம்**

சைவ சமய காப்பியமான சேக்கிழாரின் பெரியபுராணம் கிபி 12-ம் நூற்றாண்டின் சோழர்காலத்தில் சமுதாய வாழ்வியலை துல்லியமாக படம் பிடித்து காட்டும் ஒரு வரலாற்று ஆவணமாக திகழ்கிறது. நாயன்மார்களின் பக்தி வரலாற்றை கூறுவதோடு மட்டுமல்லாமல் அக்கால மக்களின் கலாச்சாரம் கல்வி சாதி பொருளாதார நிலை வாணிபம் மக்களிடையே நிலவிய நம்பிக்கைகள், திருமண சடங்கு முறைகள் போன்றவற்றையும் விரிவாக எடுத்தியம்புகிறது. அக்கால மக்கள் வேளாண்மையை முதன்மை தொழிலாக கொண்டிருந்த போதிலும் நெய்தல், வேட்டையாடுதல்; மண்பாண்டம் செய்தல்; சலவை தொழில் செய்தால் என பல தொழில்கள் செய்து வந்துள்ளனர். கோயில் கட்டிட கலைகள் கல்வி சாலைகள் சிற்ப கலைகள் போன்றவை இருந்துள்ளன என்பதனை பெரியபுராணத்தின் சான்றுகள் வழி ஆராய்வதே கட்டுரையின் நோக்கமாகும். மனிதநேயமும் விருந்தோம்பலும் ஏழை மனிதநேயமும் விருந்தோம்பலும் ஏழை எலியோருக்கு உதவுதலையுமே மக்கள் பெரும் பேராக கருதி வந்துள்ளனர். மன்னர்குளங்கள் வெட்டுதல் சாலைகள் அமைத்தல் போன்ற பொது பணிகளை மேற்கொண்டு அன்றைய மக்களை ஒரு அமைதியான வாழ்க்கை முறையில் ஈடுபட அனுமதித்துள்ளனர். எனவே அத்தகைய சமுதாய நிலைகளுள் சிலவற்றை பெரியபுராணம் துணைக்கொண்டு ஆராய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்** : ஆவணம், மண்பாண்டம், விருந்தோம்பல், கலாச்சாரம், நாயன்மார்கள்

**முன்னுரை**

இலக்கியம் என்பது வேறு எவற்றை விடவும் பண்பாட்டு வடிவங்களையும் வரலாற்று நிகழ்வுகளையும் சொல்வதற்கு மிகவும் ஏற்புடைய வாய்ப்பான சாதனமாக கருதப்படுகிறது. பண்பாடு என்பது ஓர்இயல்பு. உள்ளார்ந்த தன்மை அவற்றை உணரலாம் அறியலாம் என்றும் பண்பட்டு வருவது பண்பாடு நிலம் பண்பட பண்பட நல்ல விளைச்சல் கிடைக்கும் ஒரு சமுதாயம் நற்பண்புகளில் பண்பட பண்பட சமுதாயத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலைத்து நிற்கும். இந்த பண்பாடு மக்களின் வாழ்க்கை முறையிலும் மனித உறவுகளிலும் பட்டொளி வீசி படரும் என்றும் விளக்கி கூறுகிறார் மா. பா. குருசாமி.

சமுதாயத்தின் உறுப்பினர்என்ற முறையில் மனிதர்களால் மேற்கொள்ள பெற்ற அறிவுரைகள் நம்பிக்கைகள் கலைகள் ஒழுக்கங்கள் சட்டங்கள் வழக்கங்கள் என்பவற்றின் கூட்டு பண்பாடு எனப்படும் என்று விளக்கி கூறுகிறார் தா. ஈசுவரப்பிள்ளை. சமுதாய அமைதிக்கும் சமுதாய உயர்வுக்கும் முதன்மை தந்து சமுதாய மக்களோடு மக்களாயினங்கியும் ஒத்தும் இசைவாக வாழும் வாழ்க்கையே சமுதாய வாழ்க்கை என்று குறிப்பிடுகின்றார் தா. செல்வராசு.

ஒரு பெருங்கடல் தான் வாழும் காலத்தையும் அதற்கு முற்பட்ட காலத்தையும் பிரதிபலிக்கும் கண்ணாடியாக உள்ளான். இதன் அடிப்படையில் சேக்கிழார்தனக்கு முன்னால் வாழ்ந்த தமிழக மக்களின் சமுதாய நிலைகளை தன் படைப்பின் மூலம் தம்முன் படம் பிடித்து காட்டுகிறார். மற்ற புலவர்களைப் போல இருந்த இடத்தில் இருந்தபடியே சேக்கிழார்தம் நூலினை ஏற்றவில்லை தமிழக முழுவதும் சுற்றி திரிந்து கல்வெட்டுகள் அரசர்கள் குடிமக்கள் என்பவர்களுடைய வாழ்க்கை முறை ஆவணங்கள் ஆகியவற்றையெல்லாம் பழுதர கற்றுத் தேர்ந்தார். எனவே அவரால் நாளைய உண்மையான சமுதாய நிலையை தெளிவாக எடுத்துரைக்க முடிந்தது என்பது அன்றைய கல்வி, திருமணம், பழக்கவழக்கங்கள், நீதிமன்றங்கள், குடும்ப உறவு, சாதி நிலை, வாணிபம், ஒழுக்க முறை, நம்பிக்கைகள் போன்றவற்றை பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கல்வி**

நாயன்மார்கள் காலத்திய பண்பாட்டினைத் தன் நூல்முழுவதும் விளக்கிக கூறும் சேக்கிழார்கல்விப் பாகுபட்டினையும் கூறுகிறார். கல்வியறிவு பெற்றவர்கள் தங்கள் குழந்தையை வளர்க்கும் முறையினையும். கல்வியறிவு பெறாதவர்கள் தங்கள் குழந்தையை வளர்க்கும் முறையினையும் மிக நுட்பமான முறையில் குறிப்பிடுகின்றார்.

வேளாளச் சமுதாயத்தில் பிறந்த மருள்நீக்கியாருக்கு மயிர்நீக்கும் வினை (மொட்டை அடித்தல்) நிகழ்த்திய பிறகு. கல்விக்குரிய கலைகள் கற்பிக்கப்பட்டது என்ற செய்தியை,

*“மருள் நீக்கியார்சென்னி மயிர்நீக்கும் மணவினையும்*
*தெருள் நீர்பல் மாந்தர்எல்லாம் மகிழ்சிறப்பச் செய்ததன்பின்*
*பொருள் நீத்தம் கொள்வீசிப் புலன்கொளுவ மனம் முகிழ்த்த*
*சுருள் நீக்கி மலர்விக்கும் கலைபயிலத் தொடங்குவித்தார்”1*

என்ற பாடலில் குறிப்பிடுகின்றார். இதன்மூலம் மருள்நீக்கியாருக்கு சரியான வயதில் கல்வி கற்பிக்கப்பட்டது என்பதை உணரமுடிகின்றது.

சிறுத்தொண்ட நாயனாரின் சிவத்தொண்டைக் குறிப்பிடும்போது. 'தம் தலைவருக்கு திருவமுது ஆக்குவதற்கு உரிய மென்மையான மழலை மொழி பேசும் புதல்வரைக் கல்வி பயிலச் சென்ற பள்ளியினின்றும் உடன் அழைத்துவர விரைந்து சென்றார்' என்ற திருச்செயலினை.

*“காதல் மனையார்தாம் கூறக்*
*கணவனாரும் காதலனை*
*ஏதம் அகலப் பெற்றபேறு*
*எல்லாம் எய்தினால் போல*
*நாதர்தமக்கு அங்கு அமுதாக*
*நறுமென்குதலை மொழிப் புதல்வன்*
*ஓத அணைந்த பள்ளியினில்*
*உடன்கொண்டு எய்தக் கடிது சென்றார்”2*

என்ற பாடலில் குறிப்பிடுகின்றார்சேக்கிழார். இதன்மூலம் சிறுத்தொண்ட நாயனாரும் தன் மகனுக்குச் சரியான வயதில் கல்வி கற்பித்தார்என்பது புலனாகின்றது.

**சமுதாய உறவு**

ஒவ்வொரு இனத்தாருடைய பழக்கவழக்கங்களையும் கூர்ந்து கவனித்து அவர்களைப் பற்றிக் கூறும் வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம், அவர்களின் பழக்கவழக்கங்களையும் இணைத்துக்கூறும் சேக்கிழாரின் பாங்கு கூர்ந்து நோக்கத்தக்கது. நாயன்மார்கள் காலத்தில் சமுதாயத்தில் அனைவரும் உறவுடன் வாழ்ந்தனர் என்பதை

இயற்பகை நாயனார் புராணத்தில் எடுத்துக் கூறுகின்றார் சேக்கிழார்.

இயற்பகையார் தன் மனைவியை அடியாராக வந்த ஈசனுக்கு ஈந்தார்என்ற செய்தியைக் கேட்டு அனைவரும் திரண்டெழுந்து தங்கள் சமுதாயத்திற்கு வரும் அவமானத்தினைத் துடைக்கப் புறப்பட்டனர் என்பதை,

*“மனைவியார்சுற்றத்தாரும்*
*வள்ளலார்சுற்றத்தாரும்*
*இணையது ஒன்று யாரே செய்தார்*
*இயற் பகை பித்தன் ஆனால்*
*புனை இழை தன்னைக் கொண்டு*
*போவ தாம் ஒருவன் என்று*
*துனை பெரும் பழியை மீட்பான்*
*தொடர்வதற்கு எழுந்து சூழ்வார்”3*

என்ற பாடலில் குறிப்பிடுகின்றார். இவ்வாறு புறப்பட்ட சுற்றத்தார். இயற்பகை நாயனாரைத் தடுத்து, தங்கள் குலக்கொடியை மீட்கவும் பாடுபட்டனர் என்பதை.

*“வழிவிடும் துணையின் போத*
*வழித்துணை ஆகி உள்ளார்*
*கழிபெருங் காதல் காட்டிக்*
*காரிகையுடன் போம் போதில்*
*அழிதகன்போகேல் ஈண்டு அவ்*
*அரும்குலக் கொடியை விட்டுப்*
*பழிவிட நீபோ என்று*
*பகர்ந்து எதிர்நிரந்து வந்தார்”4*

என்ற பாடலில் குறிப்பிடுகின்றார்.

**குடும்ப உறவு**

தங்களுடைய வாழ்க்கையில் ஏற்படும் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொண்டு கூட்டுக்குடும்பமாக, பலர்சேர்ந்து வாழும் வாழ்க்கை முறையை கோட்புலி நாயனார் புராணத்தில் குறிப்பிடுகின்றார். “கோட்புலி நாயனார் மிகுதியான நெல்லினைச் சேர்த்து வைத்துப் போர்மேல் சென்றபின், பஞ்சம் ஏற்பட்டுவிடவே, அவருடைய சுற்றத்தார் அனைவரும் அந்நெல்லை எடுத்து உண்டனர்” என்று கூறுவதன் மூலம் குறிப்பிடுகிறார். சேக்கிழார்இயம்பும் இந்தக் கூட்டுக் குடும்ப உறவு முறையை,

*“மற்று அவர்தாம் போயினபின்*
*சிலநாளில் வற்காலம்*
*உறலும் அச்சுற்றத்தார்*
*உணவு இன்றி இறப்பதனில்*
*பெற்றம் உயர்த்தவர்அமுதபடி*
*கொண்டாகிலும் பிழைத்துக்*
*குற்றம் அறப் பின்கொடுப்போம்*
*எனக்கூடு குலைத்து அழித்தார்”5*

என்ற பாடலில் உணரமுடிகின்றது.

**வாணிபம்**

காரைக்கால் நகரத்தினை அறிமுகப்படுத்தும் போது. துறைமுகப் என பட்டினமாக நிறைந்த வளங்களுடன் கூடியது காரைக்கால் குறிப்பிடுகின்றார். மேலும் மானம் மிகுந்த அறநெறியில் நின்ற பெருவணிகர்கள், அந்நகரில் வாழ்ந்தனர் என்றும், அப்பெரு வணிகர்கள் குறைவில்லாத செல்வமும், சீரும் உடையவர்கள் என்றும், அத்திருநகரில் மரக்கலங்கள் வந்து அயல்நாட்டுப் பொருட்களை இறக்குவதும், உள்நாட்டுக் பொருட்களை ஏற்றுவதுமாக வாணிபத்தினால் உயர்ந்து விளங்கியது என்றும் குறிப்பிடுவதை.

*“மானம் மிகு தருமத்தின் வழி நின்று வாய்மையினில்*
*ஊனம் இல் சீர்ப் பெருவணிகர்குடிதுவன்றி ஓங்குமதி*
*கூனல்வளை திரை சுமந்து கொண்டு ஏறி மண்டு கழிக்*
*கானல் மிசை உலவு வனம் பெருகு திரைக்காரைக்கால்”6*

என்ற பாடலிலும்,

*“வங்கம் மலி கடல் காரைக் காலின் கண் வாழ்வணிகர்*
*தங்கள் குலத்தலைவனார்தனதத்தனார்தவத்தால்”7*

என்ற பாடல் வரிகளிலும் குறிப்பிடுகின்றார்.

வாணிபம் செய்யும் வணிகர்கள் காலையில் சீக்கிரமாகவே சென்று வாணிபத்தில் ஈடுபட வேண்டியிருப்பதால், மதிய வேளையில் வீட்டிற்கு உணவு உண்ண வரும்பொழுதுதான் நீராடுவார்கள். இத்தகைய வணிகர்களின் செயலை பரமதத்தன் பின்பற்றினான் என்பதை.

*“மற்று அவர்தாம் போயினபின் மனைப் பதியா ஆகிய வணிகன்*
*உற்ற பெரும் பகலின் கண் ஓங்கிய பேர்இல் எய்திப்*
*பொற்பு உற முன் நீராடிப் புகுந்து அடிசில் புரிந்து அயிலக்*
*கற்புடைய மடவாரும் கடப்பாட்டில் ஊட்டுவார்”8*

என்ற பாடல் வரிகளில் உணர்த்துகின்றார் சேக்கிழார்.

**நம்பிக்கைகள்**

வேட்டையாடி வாழ்க்கை நடக்கும் மழைநாட்டு வேடர்களின் நம்பிக்கைகளை கண்ணப்ப நாயனார் புராணத்தில் எடுத்துக் கூறும் சேக்கிழாரின் பங்கு கூர்ந்து நோக்கத்தக்கது.

வேலேந்திய வேலவனின் முன்னே நின்று, சிறந்த சேவற்கோழிகளோடு புள்ளிகள் கொண்ட மயிற்கூட்டங்களையும் காணிக்கையாகச் செலுத்தியும், மணிகள் கோத்த தோரணங்களைக் கட்டியும். வண்டுகள் அணியணியாய் மொய்க்கின்ற கடப்ப மலர் மாலைகளைத் தொங்கவிட்டும், குரவைக் கூத்தினை நடத்தியும், பெரிய திருவிழாவினையும் நடத்தி வழிபட்டனர் என்ற வேடர்களின் பிள்ளைப்பேறு குறித்த நம்பிக்கையினை,

*"பொருஅரும் சிறப்பின் மிக்கார்*
*இவர்க்கு இனிப் புதல்வர்ப் பேறே*
*அரியது என்று எவரும் கூற*
*அதன்படு காதலாலே*
*முருகு அலர்அலங்கல் செவ்வேள்*
*முருகவேல் முன்றில் சென்று*
*பரவுதல் செய்து நாளும்*
*பாராய்க் கடன் நெறியில் நிற்பார்"9*

என்ற பாடலிலும்,

*"வாரணச் சேவலோடும்*
*வரிமயில் குலங்கள் விட்டுத்*
*தோரண மணிகள் தூக்கிச்*
*சுரும்பு அணி கதம்பம் நாற்றிப்*
*போர்அணி நெடுவே லோற்குப்*
*புகழ்புரி குரவை தூங்கப்*
*பேர்அணங்கு ஆடல் செய்து*
*பெருவிழா எடுத்தான்றை"10*

என்ற பாடலிலும் முருகக்கடவுளுக்கு விழா எடுத்தால் குழந்தைப்பேறு கிட்டும் என்ற வேடர்களின் நம்பிக்கையினை உணரமுடிகின்றது.

**ஒழுக்க வாழ்வு**

ஒழுக்கமாவது கள்ளாமை. பிறன்மனை நயவாமை. புறங்கூறாமை. வெகுளாமை, கொல்லாமை, பொய்யாமை முதலியனவாகும். சிறப்பு ஒழுக்கமாவது, தத்தமது சமயங்களுக்கு ஏற்ற முறையில் சமயநெறியில் சிறந்தவராக ஒழுகுவதாகும். நாயன்மார்கள் காலத்தில் வாழ்ந்த மக்களும் இத்தகைய ஒழுக்க நெறிகள் மிகுந்த பெரும் வாழ்க்கையினையே வாழ்ந்தார்கள் என்பதனை, அப்பூதியடிகள் புராணத்திலும், திருநீலகண்ட நாயனார் புராணத்திலும் உணர்த்துகின்றார் சேக்கிழார்.

களவு, பொய், காமம், கோபம் என்ற அனைத்து குற்றங்களையும் ஒழித்தவர். வளமான இல்லற வாழ்வில் நின்றவர்அப்பூதி அடிகள் என்று அப்பூதி அடிகளின் பொதுஒழுக்க நெறியினை,

*"களவு பொய் காமம் கோபம்*
*முதலிய குற்றம் காய்ந்தார்*
*வளம்மிகு மனையின் வாழ்க்கை*
*நிலையினார்மனைப்பால் உள்ள*
*அளவை கொள் நிறைகோள் மக்கள்*
*ஆவொடு மேதி மற்றும்*
*உளஎலாம் அரசின் நாமம்*
*சாத்தும் அவ் ஒழுக்கலாற்றார்"11*

என்ற பாடலில் குறிப்பிடும் சேக்கிழார். திருவாடல் புரிவதில் வல்லவராகிய பெருமானுக்கு அன்புடையவர்பொருந்திய புகழினைக் கொண்டவர், சிவனாரால் ஆட்கொள்ளப்பட்ட சிறப்புடைய திருநாவுக்கரசரை நேரில் காணாமலேயே அவர்பால் அன்பு கொண்டவர் என்று அப்பூதி நாயனாரின் சிறப்பொழுக்கத்தினை,

*"தாண்டவம் புரிய வல்ல*
*தம்பிரானுக்கு அன்பர்*
*ஈண்டிய புகழின் பாலார்*
*எல்லை இல் தவத்தின் மிக்கார்*
*ஆண்டசீர்அரசின் பாதம்*
*அடைந்து அவர்அறியா முன்னே*
*காண்தகு காதல் கூரக்*
*கலந்த அன்பினராய் உள்ளார்"12*

என்ற பாடலில் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

அப்பூதி அடிகளைப் போலவே, திருநீலகண்ட நாயனாரும் இவ்விரண்டு ஒழுக்கங்களிலும் சிறந்து விளங்கினார் என்பதை,

*"பொய்கடிந்து அறத்தின் வாழ்வார்*
*புனல்சடை முடியார்க்கு அன்பர்*
*மெய்யடியார்கட்கு ஆன*
*பணிசெயும் விருப்பில் நின்றார்*
*வையகம் போற்றும் செய்கை*
*மனையறம் புரிந்து வாழ்வார்*
*சைவமெய்த் திருவின் சார்வே*
*பொருள் எனச் சாரும் நீரார்"13*

என்ற பாடலில் குறிப்பிடுகின்றார். இப்பாடலில் பொய்மையை ஒழித்து, அறநெறியில் வாழும் அற்புதர் என்றும், கங்கையைத் தரித்த

முடியையுடைய சிவனாரின் உண்மை அடியார்களுக்கு வேண்டுவனவாகிய அனைத்துப் பணிவிடைகளையும் விரும்பிச் செய்பவர்என்றும், உலகில் சிறந்ததாகக் கொண்டு ஒழுகப்படும் இல்லற முறை தன்மையாளர்என்றும், தம் வாழ்வில் பொய்மையை நீக்கி மெய் கண்டவர்என்றும் திருநீலகண்ட நாயனாரின் பொது மற்றும் சிறப்பு ஒழுக்கங்களைப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

**சூதாடுதல்**

மக்கள் நாயன்மார்கள் காலத்தில் பெருநகரங்களில் சூதாடும் இருந்துள்ளனர் என்பதை, மூர்க்க நாயனார் புராணத்தில் குறிப்பிடுகின்றார் சேக்கிழார்.

முதல் ஓரிரண்டு ஆட்டங்களில் தம்மிடம் வந்தவர்களை வெல்ல வைத்து, அடுத்தடுத்து வரும் ஆட்டங்கள் அனைத்திலும் தாமே வென்றனர் என்ற சூதாட்டக்காரர்களின் இயல்பினை,

“முன்சூது தாம் தோற்று முதற்பணையம் அவர்கொள்ளல்
பின்சூது பலமுறையும் வென்று பெரும் பொருள் ஆக்கிச்
சொல்சூதால் மறுத்தாரைச் சுரிகை உருவிக் குத்தி
நல்சூதர்மூர்க்கர்எனும் பெயர்பெற்றார்நானிலத்தில்”14

என்ற பாடலில் ஆய்ந்து கூறுகிறார். இதன்மூலம் அற்றை நாளைய சமுதாயத்தில் சிலர்சூதாடுபவராகவும் இருந்துள்ளனர் என்பதை உணரமுடிகின்றது.

**கையூட்டு**

பல்லவர் ஆட்சியில் அரசு அலுலவலர்களிடையே கையூட்டு வாங்கும் பழக்கம் நிலவியது என்பதை நாவுக்கரசர் புராணத்தில் குறிப்பிடுகின்றார் சேக்கிழார். சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறியதை அறிந்த மகேந்திர பல்லவன் 'நாவுக்கரசரை அழைத்து வருக' என்று ஆணையிடும்போது,

*“தெருள் கொண்டோர்இவர்சொன்ன*
*தீயோனைச் செறுவதற்குப்*
*பொருள் கொண்டு விடாது என்பால் கொடுவாரும்”15*

என்று குறிப்பிடுவதாக சேக்கிழார் பாடுகிறார். இப்பாடலில் மகேந்திர பல்லவன் காலத்தில் வாழ்ந்த மக்களின் மனநிலையை தம்முன் படம்பிடித்துக் காட்டுகின்றார் சேக்கிழார்.

**நீதிமன்றம்**

நாயன்மார்கள் காலத்தில் வாழ்ந்த மக்கள் நீதி நியாயத்திற்குப் பெரிதும் கட்டுப்பட்டு வாழ்ந்தனர். நம்பியாரூரரின் திருமணப் பந்தலில் கூடியிருந்த ஆதிசைவர்களின் முன், கிழவன் வேடத்தில் வந்து வழக்குத் தொடுக்கின்றார்சிவபெருமான். வழக்கினை விசாரிக்கும் அவ்வூரார், “வேதியரே, உலகில் ஒன்றினை வழக்கிட்டுக் கூறவேண்டுமானால் ஆட்சியில் இதுபோன்று உள்ளதையோ அல்லது நீங்கள் குறிப்பிடுவதை ஆவணத்திலோ அல்லது அயலாரின் சாட்சியின் மூலமாகவோ என்ற மூன்றில் ஒன்றினைக் கொண்டே நிரூபிக்க வேண்டும். எனவே இந்த மூன்றில் ஒன்றினைக் காட்டுவீராக” என்று கூறுவதை.

*“ஆட்சியில் ஆவணத்தில்*
*அன்றி மற்று அயலார்தங்கள்*
*காட்சியில் மூன்றில் ஒன்று*
*காட்டுவாய் என்ன முன்னே”16*

என்ற பாடலில் படம்பிடித்துக் காட்டுகின்றார் சேக்கிழார். இவ்வாறு ஊரார் கேட்டதற்குத் தன்னிடமிருந்த ஓலையின் நகலைக் காட்டுகிறார் கிழவர். அதனைப் படித்து, அதில் உள்ள கையெழுத்தினை ஆராய்ந்து இறுதியாக, சட்டத்தைப் பெரிதாக மதித்த அக்கால சான்றோர் பெருமக்கள், நீதி விசாரணையை முடித்துக்கொண்டு, 'நம்பியாரூரரே, நீர் இவ்வழக்கில் நான்மறை முனிவரிடம் தோற்றீர். ஆகவே நீர்அவருக்கு ஏவல் செய்தலே நும் கடன்' என்று தீர்ப்பளித்த முறைமையையும், அது கேட்ட நம்பியாரூரார். இதுவே நீதியாயின் அதற்கு உடன்படாமல் போவேனா?' என்று சட்டத்திற்கு உடன்பட்ட முறைமையினையும்,

*“நான்மறை முனிவனார்க்கு*
*நம்பியாரூரர்தோற்றீர்*
*பான்மையின் ஏவல் செய்தல்*
*கடன் என்று பண்பின்மிக்க*
*மேன்மையோர்விளம்ப நம்பி*
*விதிமுறை இதுவே ஆகில் என்ன*
*யான் இதற்கு இசையேன் என்ன*
*இசையுமோ என்று நின்றார்”17*

ஏன்ற பாடலில் உணர்த்துகின்றார் சேக்கிழார். இவ்வாறு நீதிக்கு தலைவணங்கும் உயர்ந்த சமுதாயத்தினராக நாயன்மார்கள் காலத்தில் மக்கள் வாழ்ந்து வந்தனர் என்பது கூர்ந்து நோக்கத்தக்கது.

**முடிவுரை**

இலக்கியம் என்பது அன்றைய சூழ்நிலை நமக்கு படம் பிடித்து காட்டும் ஒரு வரலாற்று பெட்டகம் ஆகும். பெரியபுராணம் இயற்றப்பட்ட காலத்தில் அன்றைய சமுதாய நிலை எவ்வாறு இருந்தது மக்களின் வாழ்க்கை முறை குடும்ப வாழ்வு நெறி தவறாத பண்பு கல்வி வாணிபம் போன்றவற்றையும் இக்கட்டுரை விளக்கியுள்ளது. மேலும் கல்வி நிலையில் இருந்த பாகுபாடு சாதிய பாகுபாடு போன்றவற்றையும் தெளிவாக எடுத்தியம்பியது. மக்களின் நம்பிக்கைகள் மற்றும் திருமண சடங்குகள் போன்றவற்றை கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது. சேக்கிழார்தமது பெரியபுராணத்தில் நாயன்மார்கள் காலத்திய சமுதாய உறவு, குடும்ப உறவு, கல்வி, சூதாடுதல், வாணிபம், கையூட்டு பெறுதல், நம்பிக்கைகள் பாகுபாடு கருதாமல் ஒரே இடத்தில் செல்வந்தர்களும் ஏழைகளும் வாழ்ந்த தன்மை நீதி வழங்கிய ஒரே போன்ற செய்திகளை விளக்கமாக சுட்டிக்காட்டியுள்ளார்.

**சான்றெண் விளக்கம்**

1. பெரியபுராணம் – திருநாவுக்கரசர் நாயனார் புராணம், பா. 20
2. பெரியபுராணம் - சிறுதொண்ட நாயனார் புராணம், பா. 58
3. பெரியபுராணம் - இயற்பகை நாயனார் புராணம், பா. 13
4. மேலது, பா. 15
5. பெரியபுராணம் - கோட் புலி நாயனார் புராணம், பா. 5
6. பெரியபுராணம் - காரைக்கால் அம்மையார் புராணம், பா. 1
7. மேலது, பா. 2
8. மேலது, பா. 22
9. பெரியபுராணம் - கண்ணப்ப நாயனார் புராணம், பா. 10
10. மேலது, பா. 11
11. பெரியபுராணம் - அப்பூதியடிகள் நாயனார் புராணம், பா. 2
12. மேலது, பா. 1
13. பெரியபுராணம் - திருநீலகண்ட நாயனார் புராணம், பா. 10
14. பெரியபுராணம்- மூர்க்க நாயனார் புராணம், பா. 9
15. பெரியபுராணம் – திருநாவுக்கரசர் நாயனார் புராணம், பா. 90
16. பெரியபுராணம் - தடுத்தாட் கொண்ட புராணம் பா.56
17. மேலது, பா. 63

**துணைநூற் பட்டியல்**


1. அருணாசலம், முனைவர் ப., சுந்தரர் தரிசனம் (திருத்தொண்டர் புராண விளக்கம்), தமிழ்ப் புத்தகாலயம், 576. பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-5, முதல் பதிப்பு - நவம்பர்1975.
2. ஆறுமுகம். முனைவர் கொ., பெரியபுராணத்தில் தொண்டுணர்வு, தி பார்க்கர், 293, அகமது வணிக வளாகம், இரண்டாவது தளம், இராயப்பேட்டை நெடுஞ்சாலை, இராயப்பேட்டை, சென்னை -14, முதல் பதிப்பு - நவம்பர்2004
3. இராசமாணிக்கனார், டாக்டர் மா., சேக்கிழார், பூரம் பப்ளிகேசன்ஸ், 59. ராஜு நாயக்கன் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 33. நான்காம் பதிப்பு -1995
4. இராசமாணிக்கனார். டாக்டர் மா., சைவ சமய வளர்ச்சி, பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரைக்குளம் மேற்கு தெரு, மயிலாப்பூர், சென்னை- 600004, மூன்றாம் பதிப்பு- டிசம்பர்1999
5. இராசமாணிக்கனார். டாக்டர் மா., சைவ சமயம், செல்வி பதிப்பகம், காரைக்குடி, இரண்டாம் பதிப்பு- அக்டோபர்1959
6. இராசமாணிக்கனார். டாக்டர் மா., பெரியபுராண ஆராய்ச்சி, அலமு பதிப்பகம். அய்யா தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600014, முதல் பதிப்பு -2002
7. இராஜசேகரன், இரா., சைவப் பெருவளியில் காலம், பத்தினிக்கோட்டப் பதிப்பகம், மேலையூர், பூம்புகார்-107, முதல் பதிப்பு 2004
8. கெம்பு ஆறுமுகம், பெரியபுராணம், அனுராகம் பதிப்பகம், 10 கண்ணதாசன் சாலை, தி நகர், சென்னை- 600 017, முதல் பதிப்பு - 2000.